1982 மார்ச் 1]

மாற்றுகிற வகையில், சாதாரண, ஏழை, நடுத்தர மக்கள் வாங்கிப் பயன்படுத்தக்கூடிய விலையில், சென்னையில் அன்ன பூர்ணா ஓட்டல் என்ற வகையில் மத்திய அரசு ஏற்று நடத்து வதைப்போல, தமிழக அரசும் செய்தால் என்ன? அப்படி அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய செயற்குறிப்பு இப்பொழுது இல்லை.

கோவை தாலுக்காவை இரண்டாகப் பிரிக்கும் திட்டம்.

*வினா எண். 283—திரு. மா. சின்னராசு: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கோவை தாலுக்காவை கோவை நகரம், புறநகர்ப் பகுதி ஆக இரண்டாகப் பிரித்து கூடுதல் தாலூகா ஒன்றை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சிக்கு உள்ளடங்கிய கோவை தாலுக்கா, கோவை புறநகர் பகுதி ஆகியவைகளில் உள் அடங்கிய மக்கள் தொகை தற்போது 7 லட்சத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. அந்த வட்டத்தில் புறநகர்ப் பகுதிகளும் இணைந்திருக்கிற காரணத்தால், அந்த தாலுக்காவை இரண்டாகப் பிரிப்பது மிகமிக அவசியத் தேவையாக இருக்கிறது என்கிற காரணத் தால், வருகிற தமிழ் புத்தாண்டு தினத்தில் அந்தத் தாலுக்காவை இரண்டாகப் பிரிக்க அரசு வழிமுறைகளை வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சிபாரிசு வந்த பிறகு முறையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பரிசீலனை நடைபெறுகிற சமயத்தில் அந்தத் தாலுக்கா வின் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நானும், மாண்புமிகு

உறுப்பினர் கோவைத் தம்பி அவர்களும், அதன் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கு கொள்ள அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுகிறபோது பொதுப்பணிகளில் ஈடுபட்டிருப்பவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அல்லது மற்ற யாருமே தங்களுடைய ஆலோசனைகளைச் சொல்வதற்கு எப்பொழுதும் தடை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே எந்தெந்த மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்க உத்தேசம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத்தைப் பற்றித்தான் கேள்வி, மாவட்டத்தைப் பற்றியது அல்ல.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை மாநகரத்தை ஒட்டிய புறநகர்ப் பகுதிகளைப் பிரித்து தனி தாலுக்காவாக ஆரம்பிப்பதற்கான விஷயம் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வரவேற்கத் தக்க விஷயம். எந்தெந்தப் பகுதிகளை அப்படிப் பிரித்து தாலுக்காக்களாக அமைக்க யோசனையில் இருக்கிறது? அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, எம்.எல்.ஏக்களும் மற்றவர்களும் தங்களுடைய ஆலோசனைகளைச் சொல்லலாம் என்று சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் பார்க்கிறபோது, பல மாநகராட்சிகளில் ஆலோசனைக் குழுக் கூட்டமே நடைபெறுவது இல்லை. நாங்கள் பங்கு கொள்வதும் இல்லை. ஆகவே, அந்த முறையில் இல்லாது, இதற்காகவாவது உண்மையாகவே, எங்களுடைய ஆலோசனை கேட்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. கோவையைப் பொறுத்தவரையில் அது ஆய்வில் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் உறுப்பினர்களுடைய கருத்து என்ன என்பதையும், எந்தெந்த ஊர்களை எப்படிச் சேர்க்கலாம் என்பதயும் எழுத்து மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் அனுப்பலாம். என்னிடமும் கொடுக்கலாம்.